பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 · ஐப்பசி 2 · ஜுலல்-கஜ் 8 · இதழ் 249
யாழ்ப்பாணம் · சனிக்கிழமை · 18 - 10 - 80

RECEIVED
1980 -11-
PERIODICALS
DIVISION
... OF SRI LANKA - JA... LIBRARY ...

தரத்தில் சிறந்த
மான் - முயல்
வரிக்குதிரை
யானை - விளக்கு
சந்திரிக்கா - பூ
புலிமார்க் ஓடுகளையே
பாவியுங்கள்
மு. தா. பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

## பரந்தன் கொலை: மேலும் நால்வர் கைது! துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பரந்தன் சந்தையிலுள்ள கட்டிடமொன்றில் இராசையா பாலசுப்பிரமணியம் என்பவர் கடந்த மாதம் 30ம் திகதி துப்பாக்கியால் சுடப்பட்டு கொலையுண்டது தொடர்பாக மேலும் நால்வர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

# குடியுரிமை இழந்த ஒருவர் பிரச்சாரம் செய்ய முடியாது!

## சபையில் நிறைவேறிய புதிய சட்டமூலங்கள்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று பல முக்கிய சட்ட மூலங்கள் கொண்டு வரப்பட்டு, மூன்றில் இரண்டு அதிகப்படியான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டன. நேற்று நிறைவேறிய ஜனாதிபதித் தேர்தல் விசேட ஏற்பாடுகள் சட்ட மூலத்தின்படி குடியுரிமை இழந்த ஒருவர் இன்னொருவருக்காகவோ அல்லது ஒரு கட்சிக்காகவோ தேர்தல் பிரச்சாரம் செய்ய முடியாது.

பாராளுமன்றம் நேற்று மாலை கூடியபோது, பாராளுமன்றத் தேர்தல் திருத்த சட்டமூலம், ஜனாதிபதித் [illegible] சட்டமூலம், ஜனாதிபதித் தேர்தல் விசேட ஏற்பாடுகள் சட்டமூலம், சர்வஜன வாக்கெடுப்பு சட்டமூலம் ஆகிய சட்டமூலங்கள் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவினால் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பாராளுமன்றத் தேர்தல் திருத்த சட்டமூலத்தின்படி; அங்கீகரிக்கப்பட்ட சகல அரசியல் கட்சிகளும் வானொலி, டெலிவிஷனில் சமமான நேரம் பெற்று தேர்தல் பிரச்சாரம் செய்ய அனுமதிக்கப்படும். தேர்தல் பிரச்சாரத்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஒழுங்கீனங்களை நீக்க வ பிரேரணைகள் தாக்கலாகின

### பிரதமர் விளக்கம்

(கொழும்பு)

"ஒழுங்கீனங்களை நீக்கவும் வழமையான சட்டங்கள் அனுசரிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்குமாகவே இவ்விரு பிரேரணைகளும் கொண்டுவரப்படுகின்றன."

மேற்கண்டவாறு பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா; சிறிமாவின் குடியுரிமையை 7 ஆண்டுகள் நீக்கி அவரை பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றுவதற்கும், திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் குடியுரிமையை 7 ஆண்டுகள் நீக்குவதற்குமான பிரேரணைகள் மீதான விவாதத்தைப் பாராளுமன்றத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அவ்விவாதத்தில் மேலும் பேசுகையில் கூறியதாவது: "அரசியல்வாதிகள் தமது நடவடிக்கைகளால் ஏற்படக்கூடிய விளைவுகளை எதிர்நோக்கவும் தயாராகவிருக்கவேண்டும். குழப்

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். லயன்ஸ் ஆதரவில் ஐ. நா. தினம்

### 14 பாடசாலைகள் கலந்துகொள்ளும்

(யாழ்ப்பாணம்)

யாழ் லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் ஐக்கியநாடுகள் தினம், இம்மாதம் இருபத்திநான்காம் திகதி கொண்டாடப்படும்

யாழ். மத்தியகல்லூரி மண்டபத்தில் அன்று மாலை நடைபெறவிருக்கும் ஐ. நா. தினத்தில்; யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் கா. இந்திரபாலா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இவ்வைபவத்தில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபைக் கூட்டம் போன்று ஒரு மாதிரிக்கூட்டம்நடைபெறும் இதில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பதினொரு பாடசாலைகளுடன், லியோ கழகமும் பங்கு பற்றும். இக்கூட்டத்தில் "ஐக்கியநாடுகள் சபையில் வல்லரசுகளுக்குள்ள ரத்து அதிகாரம் நீக்கப்படவேண்

(8-ம் பக்கம் பார்க்க)

## வீடு உடைத்து ரூ.40000 கொள்ளை

### சில்லாலையில் சம்பவம்

(பண்டத்தரிப்பு)

வீட்டுக்காரர் தேவாலயத்துக்குச் சென்றிருந்த சமயம் வீட்டை உடைத்து 40,000 ரூபா பெறுமதியான தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் சில்லாலையில் நேற்றுக் காலை நடந்துள்ளது.

சில்லாலையைச் சேர்ந்த பிரான்சிஸ் அல்பர்ட் என்பவர் நேற்றுக் காலை 6 மணிக்கு தேவாலயத்துக்குச் சென்று வழிபட்டபின் காலை 8 மணிக்குத் திரும்பியபோது வீடு உடைக்கப்பட்ட நிலையிலிருக்கக் காணப்பட்டது.

சூட்கேசில் வைக்கப்பட்டிருந்த 9 பவுண் நிறையுள்ள தாலிக்கொடி மற்றும் தங்கச் சங்கிலிகள், காப்புகள் ஆகியவை கொள்ளையடிக்கப்பட்டிருந்தன. நகைகள் வைக்கப்பட்டிருந்த சூட்கேஸ் மற்றும் பொருட்கள் வீசப்பட்டிருந்தன.

இச்சம்பவம் பற்றிச்

(5-ம் பக்கம் பார்க்க)

பதவி வெற்றிடங்கள்
லிகிதர் / பணம் வசூலிப்பவர்

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்கு 22-10-80புதன் கிழமை காலை 9-00 மணிக்கு கலாசாலை வீதியில் அமைந்திருக்கும் பால் சேகரிப்பு நிலையத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும். க. பொ. த. (சாதாரணம்) பரீட்சை சித்தியடைந்தோர் உரிய அத்தாட்சிப் பத்திரங்களுடன் சமுகம் அளிக்கவும், இப்பதவிக்கு ரூபா 1000-00 பிணைப்பணம் கட்ட வேண்டும்.

தலைவர்,
கூட்டுறவு
பால் சேகரிப்பு நிலையம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

7121

## குடியுரிமையைப் பறிப்பது ஐ.நா. சபையின் மனிதஉரிமை சாசனத்துக்கு முரணானது

### சபையில் 'அமிர்'

(கொழும்பு)

"அந்தனகல தொகுதி மக்களின் இறைமக்கு மதிப்பளிக்க வேண்டும். அந்த உரிமையைப் பறித்துவிடக்கூடாது. திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் குடியுரிமையைப் பறிக்கும் தீர்மானத்தை மீளப்பரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்கிறேன்".

மேற்கண்டவாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம்; திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் குடியுரிமையை நீக்குவதென்றும், அவரைப் பாராளுமன்றத்திலிருந்து அகற்றுவதென்றும் கொண்டுவரப்பட்ட பிரேரணை மீது பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

பிரேரணை மீது திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "ஒருவரின் பிறப்புரிமையான குடியுரிமையைப் பறிப்பது ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமை சாசனத்திற்கு முரணானதாகும் ஒரு குற்றவாளிக்கு தன்னை விசாரணையிலிருந்து பாதுகாத்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பும் [illegible] வேண்டும். ஆனால் இங்கு [illegible] வாய்ப்பு குற்றவாளிக்கு வழங்கப்படவில்லை.

"கடந்த அரசாங்கத்தில் நடந்த நீதியற்ற சம்பவங்கள் பற்றி பிரதமர்பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார். தமிழர் விடுதலைக்கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாமும் சிறிமாவின் கடந்த ஆட்சிக் காலத்தில் துன்புறுத்தப்பட்டோம். நானும், மூன்று கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களும் அவரின் ஆட்சிக்காலத்தினபோது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டோம். அவ்வாறு தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட காலத்தில் காலஞ்சென்ற ஜி. ஜி. பொன்னம்பலம் எமக்காக வாதாடி, அரசியலமைப்புச் சட்டமே பிழையானதென்று கூறி எம்மை விடுதலை செய்தார். சிறிமாவின் ஆட்சிக் காலத்திலேயே காங்கேசன் துறைத் தொகுதிக்கான இடைத்தேர்தலும் நடைபெறாது பின்போடப்பட்டது. நான் இன்று அத்தொகுதியின் பிரதிநிதியாகவுள்ளேன்.

"ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கத்தினாலும் [illegible] கட்சியாலும் அவற்றினால் நாங்கள் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டுள்ளோம். தற்போதைய அரசாங்கத்தினாலும் துன்புறுத்தப்பட்டே வருகிறோம். நாம் அரசியல் எதிரியைப் பழிவாங்குவது முறையற்ற செயலெனக் கருதுகிறோம். அப்படிப்பழிவாங்குவது நீதியானதுமல்ல. திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கடந்த ஆட்சிக் காலத்தில் இழைத்த அதிகார துஷ்பிரயோகங்களை சரியான முறையில் மதிப்பிடமுடியாது.

"இத்தீர்மானத்தின் மூலம் ஒருவரின் அடிப்படை மனித உரிமை பறிக்கப்படுகிறது.

8-ம் பக்கம் பார்க்க).

## கடையில் திருட்டு

(மட்டுவில்)

சாவகச்சேரியிலுள்ள கைக்கடிகாரக் கடையொன்றில் சுமார் 3000 ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

விம்ஸ் இசைக்கலைக் கல்லூரி
வீணை * வயலின் * பாட்டு * நடனம்
* மிருதங்கம் * கிட்டார் * அக்கோடியன்
வகுப்புகள் அனுபவமும் தகுதியும் வாய்ந்த பட்டதாரி ஆசிரியர்களால் நடத்தப்படுகின்றன.
புதிய மாணவர் அனுமதி: 19-10-80 காலை 10-00மணி
தொடர்பு:
விம்ஸ்
14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
7119

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

விறகாகப் பாவிக்கக்கூடிய தறித்துத் துண்டுகளாக்கப் பட்ட பெரிய சவுக்கு மரம் விற்பனைக்குண்டு. காரைநகர், கசோரினபீச், காம்ப் ஹவுஸ் காவலாளியுடன் தொடர்பு கொள்ளவும். 7086

இசைப்பிரியர் களுக்குரிய வயலின் வாத்தியம் கமக் காரர்களுக்குரிய, சேறு உழவுக்கு உதவும் சில்லு (கேஜ் வீல்) 19, கடைச்சாமி வீதி, நீராவியடி. 7113

எங்களிடம் இங்கிலாந்தில் இருந்து தருவிக்கப்பட்ட திறமான (Seagulla) நீலம் கையிருப்பில் உண்டு. தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். ஸ்ரீ கிருஷ்ணா றேடேஸ், 92 ஆஸ்பத்திரி றேட் யாழ்ப்பாணம். 7076

### பயிற்சி

3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 27-10-1980ல் ஆரம்பமாகின்றது. Institute of Engineering Technology 9/1, Stanley Road Jaffna. 7107

### தேவை

மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவமுள்ள கார் சாரதி உடனே தேவை. நேரில் வரவும். அரஸ்கோ இன்டஸ்றீஸ், 163, கண்டிவீதி, யாழ்ப்பாணம். 7105

நன்றாய் வேலைசெய்யக்கூடிய ஆண், பெண் தொழிலாளர் தேவை. நேரில் வரவும். அரஸ்கோ இன்டஸ்றீஸ், 163, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 7106

### வகுப்புகள்

19-10-1980 விஜயதசமியன்று காலை 9-11 மணியளவில் புது மாணவிகள் வீணை வகுப்புகளுக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். 33,[61]தேவாலய வீதி, (CHAPEL STREET), யாழ்ப்பாணம். தொலைபேசி: 390. (7108)

### சுன்னாகம் பல் நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது) சுன்னாகம்

## அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 5000க்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகளும், வெற்று கழிவு பரல்களும், கழிவு சீனியும், கழிவு மாவும் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன. வெற்றுச்சாக்குகளுக்கு மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/-உம், ஏனையவற்றிற்கு ரூபா 50/-உம் சங்கக் காரியாலய வேலைநாட்களில் செலுத்திக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் அனைத்தும் 25-10-80 சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்
பல. நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
16-10-80. 7118

# உயர் வகுப்பு மாணவருக்கு சமூகசேவைப் போதனை

(மாவிட்டபுரம்)

''விழிப்புலனற்றவர்கள் சமுதாயத்திலிருந்து விதிவிலக்காகக் கருதாது அவர்களுக்கேற்ற விதத்தில் வசதிகள் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்கள் உயர்ந்த நிலைக்கு வரமுடியும். யாழ் பல்கலைக்கழகத்தில் இரு விழிப்புலனற்ற மாணவிகள் பட்டப் படிப்பை மேற்கொண்டுள்ளதை அறியும்போது பெருமைப்பட வேண்டியுள்ளது. இவர்கள்போல் மேலும் பலரை உருவாக்க நாம் முன்வர வேண்டும்.''

இவ்வாறு விழிப்புலனற்றோர் கல்வி முறை பற்றிய கண்காட்சியை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் ஆரம்பித்துப் பேசிய கல்லூரி அதிபர் திரு. பொ. சோமசுந்தரம் கூறினார்.

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஆதரவில் மேற்படி கல்லூரியில் நடத்தப்பட்ட சர்வதேச வெள்ளைப் பிரம்பு தின விழாவின் ஓர் அம்சமாகவே மேற்படி கண்காட்சி இடம்பெற்றது.

சட்டத்தரணி க. வே. மகாதேவன் தலைமையில் நடந்த இவ்விழாவில் யாழ். சமூக சேவைப் பகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. இராமநாதன் பேசுகையில் கூறியதாவது:- ''விழிப்புலன் மட்டுமல்ல ஏதோ ஒரு அங்கவீனம் காரணமாக ஏனையவர்களைப் போல் நடமாட முடியாத பலரை வீதிகளில் நாம் காண்கிறோம். அவர்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால்கூட கவனியாது சென்றுவிடுகிறோம். இப்படியானவர்களுக்கு கைகொடுத்துதவ வேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும். இன்றைய மாணவர்களிடையே இப்படியான சமூகசேவை மனப்பான்மை அரிதாகவே காணப்படுகிறது. யாழ் சமூகசேவைப் பகுதியும் வடமாநில கல்வித் திணைக்களமும் இணைந்து பாடசாலை உயர் மாணவர்களுக்கு சமூக சேவை பற்றிய போதனைகளை அளிக்க ஏற்பாடுகள் செய்து வருகிறோம். விரைவில் இப்போதனை ஆரம்பமாகும்'' என்றார்.

தெல்லிப்பழை லயன்ஸ் கழகத் தலைவர் திரு. சி. எஸ். சுப்பிரமணியம் பேசுகையில் ''எமது கழகம் இவ்விழாவினையொட்டி வெள்ளைப்பிரம்பை அன்பளிப்புச் செய்துள்ளது. இதுமட்டுமன்றி விழிப்புலனற்றோருக்கு வேண்டிய சேவைகளை ஆற்ற நாம் தயாராக உள்ளோம்.'' என்றார்

கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் திரு. யே. எஸ். டேவிட் உட்பட பலர் பேசினர். விழிப்புலனற்றோரின் கலைநிகழ்ச்சிகளும் நடந்தன.

## முஸ்லீம் மகளிர் மகாவித்தியாலயம்

(மன்னார்)

''முல்லைத்தீவு. வவனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் ஒரே ஒரு முஸ்லீம் மகளிர் மகாவித்தியாலயமாக விளங்கும் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகளிர் மகாவித்தியாலயம் அதிகரித்து வரும் மாணவிகளின் சராசரி வரவுக்கேற்ப மேற்கொள்ளப்படும் இவ்விஸ்தரிப்பு, முஸ்லீம் மாணவிகளின் உயர்தரக்கல்வி முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவும்'.

இவ்வாறு எருக்கலம்பிட்டி மகளிர் மகாவித்தியாலயத்தில் 65 ஆயிரம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் கட்டிடத்திற்கான அடிக்கல்லை மூதூர் எம் பி.யும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச். மஹ்ரூப் நாட்டியபின் நடைபெற்ற கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றிய வித்தியாலய அதிபர் ஜனாபா சரீபா கபூர் கூறினார்.

## இப்படியும் நடக்கிறது

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையிலுள்ள பிரசவ வார்ட்டுகளில் அனுமதிக்கப்படும் பிரசவத்தாய்மார்களினதும், கர்ப்பவதிகளினது தேவைக்காக அவர்கள் தம்முடன் வைத்திருக்கும் கோப்பித்தூள், சீனி போன்றவை அடிக்கடி திருட்டுப்போவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

பிரசவ காலத்தில் தமது உபயோகத்திற்காக கோப்பித்தூள், சீனி என்பனவற்றை திருட்டுக்கொடுத்துவிட்டு எதுவும் இல்லாது அவர்கள் பரிதவிக்கும் சம்பவங்கள் அதிகரித்துவருவதாக சவலை தெரிவிக்கப்படுகிறது.

## தடுப்பு மருந்து

(பண்டத்தரிப்பு)

நாட்டில் இளம்பிள்ளைவாத நோய் மீண்டும் பரவிவருவதை அடுத்து பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் ஆறு வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் முற்பகல் நேரங்களில் தடுப்பு மருந்து வழங்கப்பட்டுவருகிறது.

போஷாக்கு இல்லாத குழந்தைப் பிள்ளைகளுக்கு 'திரிபோஷ' மாவும் செவ்வாய்க்கிழமைகளில் நடைபெறும் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவில் வழங்கப்பட்டுவருகிறது.

## அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றப்
மரணசாதனமின்றி மரணமெய்திய கொக்குவில் மேற்கு, கொக்குவில் குழந்தைவேலு பெண் மனோன்மணியின் மரணச் சொத்து விடயமாக.

மரணமெய்தியவர்
செல்லத்துரை ஜெகநாதன், பொன்னையா ஒழுங்கை, வண்ணார் பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை.
மனுதார்

வழ. இல. ரி / 3541
எதிர்
செல்லத்துரை தில்லைநாதன் தற்போது இல. 15/1, மெய்றலன்ற் கிறசன்ற், கொழும்பு 7.
எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனமில்லாத தத்துவ வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில், அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1980-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31-ம் நாளன்று முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

1980-ம் ஆண்டு ஆவணி மாதம் 29-ந் திகதி.

நீதிமன்றஆணைப்படி
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.
என்னால் வரையப்பட்டது;
த. சோமசுந்தரம்,
மனுதாரின் பதிவு பெற்ற சட்டத்தரணி. 7111

## மின் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பனிப்புலம் கிராமத்திற்கு விரைவில் மின்சாரம் வழங்குவதற்கு வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். இதன்பொருட்டு இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் வட்டு. எம். பி. 77 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடுசெய்துள்ளார்.

## வெகுஜன இயக்கம் ஆராயும்

(உடுப்பிட்டி)

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் குறித்து தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் பொதுச்சபை கூடி ஆராய்ந்து முடிவெடுக்கவுள்ளது.

இது சம்பந்தமான விசேட பொதுக்கூட்டமும், அக்டோபர் 2 நினைவு தினக் கூட்டமும் இம்மாதம் 19ம் திகதி ஞாயிறு காலை உடுப்பிட்டி கொற்றாவத்தை அ. மி. பாடசாலைக்கு அண்மையில் நடைபெறவுள்ளது.

வரவிருக்கும் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எந்தெந்த வகைகளில் சாதகமாயுள்ளன என்பது குறித்து இக்கூட்டத்தில் வெகுசன இயக்கப் பிரமுகர்கள் உரைநிகழ்த்துவர். பிரஸ்தாப இயக்கத் தலைவர் திரு. கே. கிருஷ்ணபிள்ளை கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்.

## மன்னார் ரயில்நிலைய சீர்கேடு!

(மன்னார்)

மன்னார் ரயில் நிலையத்தில் பிரயாணிகள் குடிநீர், இருக்கை வசதியின்றிப் பெரிதும் அவஸ்தியுறுகின்றனர்.

மன்னார் ரயில் நிலையத்தில் தினமும் சுமார் 300 பிரயாணிகள் ரயில் பிரயாணத்தை மேற்கொள்ள வருகின்றனர். இவர்கள் இரவு 10 மணிவரையிம் ரயிலுக்காகக் காத்துநிற்கின்றனர். சிலநாட்களில் இரவு 12 மணிவரையும் காத்து நிற்கின்றனர்.

இவர்களுக்கு ரயில் நிலையத்தில் இருப்பதற்கு இருக்கை வசதியில்லை. அத்துடன் குடிநீர்வசதியும் இல்லாது அவதிக்குள்ளாகின்றனர்.

அருள்மனை
அனாதைப் பிள்ளைகள் இல்லம்
தென் இந்திய திருச்சபையினால் மானிப்பாயில் நடாத்தப்படும்
''அருள்மனை'' என்னும்
அனாதை ஆண் பிள்ளைகள் இல்லத்தில்
புதிய வருடம் பாடசாலைக்குச் செல்லும்
வசதியுடன் சில வெற்றிடங்கள் உண்டு
அனாதரவான 12 வயதுக்குட்பட்ட தாய், தந்தையர் அற்ற ஆண்பிள்ளைகள் சேர்க்கப்படுவர்.
விண்ணப்பங்களை பின் வரும் விலாசத்திற்கு
வருகிற நவம்பர் மாதம் 10-ந் திகதிக்கு (10-11-80) முன் அனுப்பிவைக்கவும்.
முகாமையாளர்,
''அருள்மனை'',
உடுவில் வீதி, மானிப்பாய்.
71 5

சசி காமன்ஸ்
நிற்றற் றெடிமேட் ஆடைகள்
Knitted Ready made Garments
அண்மையில் மானிப்பாய் வீதி உடுவிலில் ஸ்தாபிக்கப்பட்ட
''சசி காமன்ஸ்''
தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட
ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள்
அணியக்கூடிய சிறந்த தரமுள்ள
நிற்றற் றெடிமேட் ஆடைகள்
முதல்முறையாக விற்பனைக்கு விடப்படவுள்ளன.
சில்லறையாகவும், மொத்தமாகவும் கொள்வனவு செய்ய விரும்புவோர் பின்காணும் விலாசத்திற்கு
கடித மூலமாகவோ நேரடியாகவோ
தொடர்பு கொள்ளவும்.
மொத்த வியாபாரிகளுக்கு விசேஷ சலுகை உண்டு.
நேரடிப் பாவனையாளர்கள் கிழமை நாட்களில்
தொழிற்சாலை விற்பனை களஞ்சியத்தில்
மேற்சொல்லப்பட்ட ஆடைகளை
வாங்குவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.
பொதுமுகாமையாளர்,
'சசி காமன்ஸ்'
(உடுவில் கிராமசபைக்கு அண்மையில்)
மானிப்பாய் வீதி, உடுவில்.
7114

தேவை
கந்தஷஷ்டி விழா மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் திருச்செந்தூர் புராணத்திற்கு பயன் சொல்லக்கூடிய மெய்யடியார்கள் வேண்டப்படுகிறார்கள். விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள்
(ஆதீனகர்த்தா, பிரதம சிவாச்சாரியார்)
7063

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் ஒருமைப்பாட்டை

# சீர்குலைக்க முயற்சி

## பிரதமர் எச்சரிக்கை

புதுடில்லி, அக். 17

முஸ்லிம் மக்களுக்கு இந்தியாவில் பாதுகாப்பில்லை என்ற குற்றச்சாட்டை இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி மறுத்துள்ளார்.

மொகதராபாத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பிரதமர் உரையாற்றுகையில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சிலர் மேற்கொண்டிருக்கும் பொய்ப்பிரசாரத்தினால் மக்கள் தவறானவழியில் செல்லக்கூடாது என்று கேட்டுக் கொண்டார்.

நாடு விடுதலையடைந்தபின்னர் முஸ்லிம்களின் சனத்தொகை இந்தியாவில் இருமடங்காகியுள்ளது. தங்களுக்குப் பாதுகாப்பில்லையென்று அவர்கள் கருதியிருந்தால் இது ஏற்பட்டிருக்காது. இந்தியாவின் ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்கச் சில சக்திகள் முயலுகின்றன. இதுகுறித்து இந்திய மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். வகுப்புக் கலவரங்கள் நாட்டின் முன்னேற்றத்தை பாதித்துவிடும். மொகதராபாத்மக்கள்அமைதியையும், ஒற்றுமையையும் பாதுகாக்கவேண்டும்'' என்றும் பிரதமர் கூறினார்.

மொகதராபாத் வன்செயல்கள் குறித்து நிருபர்களிடம் கருத்துத் தெரிவித்த திருமதி இந்திராகாந்தி, ஒருசிலரின் சதிமுயற்சிகளே இவற்றிற்குக் காரணமென்றும், இதன்மூலம் அவர்கள் அரசியல்லாபம்பெற முயலுகிறார்களென்றும் இந்தியாவின் எதிர்கால ஒற்றுமைக்காகவும், உலக அமைதிக்காகவும் இந்திய மக்கள் பாடுபடவேண்டும் என்றும் கூறினார்) (வெ.

### புயல் எச்சரிக்கை

சென்னை, அக், 17

தமிழ்நாட்டின் வடபகுதியிலும் ஆந்திரப் பிரதேசத்தின் தென்கரையிலும் மணிக்கு 60 மைல் வேகத்தில் இன்று மாலை புயல்வீசக்கூடுமென அறிவிக்கப்பட்டுள்ளது. [வெ]

### பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்

(அரியாலை)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் 40 வருடங்களுக்கு மேலாக ஆசிரியையாகப் பணியாற்றிய திருமதி செல்லையா ஆசிரியர் பதவியிலிருந்து இளைப்பாறியுள்ளார். இவரது சேவையைப் பாராட்டி மாணவர்கள் சார்பில் பிரிவுபசார வைபவமும், ஆசிரியர் மன்றச் சார்பில் இரவு விருந்தும் அளிக்கப்பட்டது.

இவர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் முன்னைய அதிபரான காலஞ்சென்ற திரு. செல்லையாவின் துணைவியாவார்.

ஈரான் — ஈராக் யுத்தம்:

## அந்நிய தலையீட்டை அனுமதிக்க முடியாது!

### சோவியத்யூனியன் வற்புறுத்தல்

மாஸ்கோ, அக். 17

''ஈரான்—ஈராக் யுத்தத்தில் அந்நியத்தலையீட்டை அனுமதிக்கமுடியாது; அதைத் தீர்ப்பதில் பொறுமையும் விவேகமும் வெற்றிபெறவேண்டும். பேச்சுக்கள் மூலமும், அமைதியான முறையிலும் பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டும்''

இவ்வாறு பிராவ்டா தெரிவித்துள்ளது.

அது மேலும் தெரிவித்துள்ளதாவது:

''யுத்தத்தை நிறுத்தி, நிலைமையை அபிவிருத்திசெய்வதற்கான முயற்சிகள் வெற்றிபெறுமென்று நல்லெண்ணம் படைத்த மக்கள் அனைவரும் நம்புகின்றனர். ஆனால் வேறொருவிதமான மனப்பான்மையும் காணப்படுகிறது. வெள்ளைமாளிகையின் உயர்வட்டாரங்களில், பேச்சளவில், ஈரான்-ஈராக் விவகாரங்களில் தலையிடாமை பற்றியும் கண்டிப்பான நடுநிலைமை வகிப்பது பற்றியும் பேசப்படுகிறது.

ஈரான்—ஈராக் யுத்தப்பகுதியில் அமெரிக்கா ஒரு பெரும் கடற்படையை நிலைநிறுத்தி வைத்துள்ளது.

''அமெரிக்காவின் அயல்துறைக் கொள்கையில் முன்பு பல சந்தர்ப்பங்களில் சாகசப் போக்கு இருந்திருக்கிறது. அதனால்தான் இப்பொழுதும் அவ்விதம் நிகழக்கூடாது என்று உலக மக்கள் கவலைப்படுகின்றனர்'' என்று 'பிராவ்தா' கூறியுள்ளது.

ஈரான் — ஈராக் யுத்தம்:

## ''பதட்ட நிலையை

### அமெரிக்கா தோற்றுவித்துள்ளது''

மாஸ்கோ, அக். 17

''ஈராக்குக்கும் ஈரானுக்குமிடையிலான உறவுகளில் ஏற்பட்டுள்ள அபாயகரமான திருப்பம் குறித்தும் இருநாடுகளுக்கிடையிலான ஆயுத மோதல்கள் ஆழமுற்றும் விரிவடைந்தும் வருவது குறித்தும் சோவியத் மக்கள் ஆழ்ந்த கவலை தெரிவிக்கின்றனர்'' என்று சோவியத்-ஆபிரிக்க-ஆசிய ஒருமைப்பாட்டுக் கமிட்டி தெரிவித்துள்ளது.

அக்கமிட்டி மேலும் தெரிவித்திருப்பதாவது: ''கெடுபிடிகளை நிறுத்திவிட்டு முக்கிய பிரச்னைகளுக்கு சமாதான வழியில் தீர்வுகாணுமாறும் இன்றுள்ள நிலையை ஏகாதிபத்தியமும் பிற்போக்கும் சுயநல நோக்கங்களுக்குப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டாமெனவும் ஈரானையும் ஈராக்கையும் வலியுறுத்தியுள்ளது. இப் பிராந்திய நிலைமையை மேற்குலக ஏகாதிபத்திய வட்டாரங்களின் முக்கியமாக அமெரிக்காவின் நடவடிக்கைகள் உக்கிரப்படுத்தியுள்ளன. பதட்ட நிலையைத் தூண்டிவிட்டுள்ளன. பாரசீக குடாவில் எண்ணிக்கையற்ற வகையில் குவிந்துள்ள அமெரிக்க கடற்படைக் கப்பல்களும் அதிகரித்துள்ள ராணுவ பலமும் ஈரான் - ஈராக் எல்லைகளில் பேச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.''

## அசாம் பிரச்னை

### உடன்பாடு ஏற்படவில்லை

கௌகாத்தி, அக். 17

மத்திய அரசுக்கும், அசாம் கிளர்ச்சித் தலைவர்களுக்குமிடையே நடைபெற்ற அசாம் வெளிநாட்டவர் பிச்னை பற்றிய பேச்சுவார்த்தைகளில் உடன்பாடு எதுவும் காணப்படவில்லை.

எனினும் இப்பேச்சுவார்த்தையின் மூலம் ஒரு தரப்பினரை மற்றொரு தரப்பினர் புரிந்து கொண்டிருப்பதாக மத்திய அரசாங்கத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஐந்து நாட்கள் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையின் போதுஅரசுதரப்பிற்குதலைமை தாங்கிய மத்திய உள்துறை அமைச்சர் திரு.ஸயில்சிங் இதுகுறித்து புதுடில்லியில் மீண்டும் பேச்சுக்கள் நடைபெறுமென்று நம்பிக்கை தெரிவித்தார்.

தாங்கள் தெரிவித்திருக்கும் சில யோசனைகளை மத்தியஅரசு எவ்வாறு பரிசிலனை செய்கின்றதென்பதைப் பொறுத்தே அசாம் பிரச்னை பற்றியஅடுத்த சுற்றுப்பேச்சுக்கள் நடைபெறுமென்று கிளர்ச்சித் தலைவர்களின் பிரதிநிதியொருவர்கூறினார்.

1961ம் ஆண்டிற்கும் 1971ம் ஆண்டிற்குமிடையே அசாமிற்குள் நுழைந்த வெளிநாட்டவர்களின் எதிர்காலம் பற்றிய விடயம்தான் இப்பேச்சுவார்த்தைகளில் முக்கிய பிரச்னையாக இருந்ததென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வெ)

### பருத்தித்துறையில் களுதாவளை வெற்றிலைப் பயிர்

(பச்சிலைப்பள்ளி)

மட்டக்களப்பு மாவட்டத்தில், களுதாவளை என்னுமிடத்தில் பயிரிடப்படும் வெற்றிலைச்செடியின் கொழுந்து, பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள வெற்றிலைக்கேணி என்னுமிடத்தில் பரீட்சார்த்த அறையில் நடப்படவுள்ளது.

இத்தகவலைப் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் தெரிவித்தார்.

களுதாவளையைப் போன்று வெற்றிலைக்கேணியும் மணற் பிரதேசமாகவிருப்பதினால் இங்கும் வெற்றிலைச்செடி வளரக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதால் வெற்றிலைக்கேணி என்னும் பெயர் ஒரு காரணத்துடன் தான் சூட்டப்பட்டிருக்கலாம் என்றும் திரு. துரைரத்தினம் தெரிவித்தார்.

### தமிழர் நட்பு மன்றம்

(வேலணை)

தமிழக—ஈழ மாணவர்கள், இளைஞர்களிடையே நட்பினை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்கத்துடன் இயங்கும் இம்மன்றத்தில் உறுப்பினர்களாகச் சேரவிரும்புவோர் திரு. ஜ. ஜெகதீசன், இராசையா வீதி, [illegible] என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (கு)

## சீனு அணுசோதனை

வாஷிங்டன், அக்டோபர் 17

சீனு வானில் அணுகுண்டுப் பரிசோதனை ஒன்றை மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனுவின் வடமேற்குப் பகுதியிலுள்ள அணுகுண்டுப் பரிசோதனை நிலையத்திலேயே இப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வெ)

## அல்ஜீரிய நகரில் மீண்டும்பூகம்பம்!

### 6000 சடலங்கள் மீட்கப்பட்டன

அல்ஜியஸ், அக். 17

அல்ஜீரியாவில் இடம்பெற்ற பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீட்புப்பணிவேலைகள் நடைபெற்றுவரும்வேளையில், இப் பூகம்பத்தினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட ரெல்லசாம் நகரில் நேற்றும் மூன்றுமுறை பூமியதிர்ச்சி ஏற்பட்டது.

இப் பூமியதிர்ச்சியின்போது ஏற்பட்ட ஆட்சேதம்பற்றி உடனடியாக எதுவும் அறிவிக்கப்படவில்லை. அல்ஜீரியாவில் பூகம்பத்தினால் சேதமடைந்த இடிபாடுகளிலிருந்து இதுவரை சுமார் 6000 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [வெ]

### பொலிசார் நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் சமூகசேவைகள் அதிகாரியின் உதவியுடன் மன்னார் பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக மன்னார் பட்டினத்தில் யாசகம் பெற்றுவந்த 50 பிச்சைக்காரர்கள் பொலிசாரினால் பிடிக்கப்பட்டனர்.

பொலிசாரிடம் அகப்பட்ட பிச்சைக்காரர்கள் கங்கொடவில முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு அவர்களுக்கு தகுதிக்கேற்றவாறு சிறு தொழில்கள் வழங்கப்படவுள்ளன.



(காரைநகர்)

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட டாக்டர் கே. சதாசிவம் தமது மருத்துவப் பணியை 1948 ல் அலுத்நுவர வைத்தியசாலையில் ஆரம்பித்து கொழும்பு, எல். ஆர். எச்., டி. எம். எச். போன்ற இடங்களிலும் பல்வேறு மருத்துவமனைகளிலும் தொடர்ந்து திறம்படப் பணிபுரிந்தார் இவர். 1979-ல் காரைநகர் அரசினர் வைத்தியசாலையில் பணியாற்றினார்.

எந்நேரமும் வெண்மை ஆடையுடனேயே காட்சி தந்த இவர் கடந்த சில மாதங்களாக நோயுற்றிருந்தபோதிலும் தமது பணியைக் கண்ணியத்துடன் நேரம் தவறாது திறமையாகச் செய்து எல்லோரினதும் நன்மதிப்பையும், பாராட்டுதலையும் பெற்றார். தமது சொந்த ஊரில் அன்னார் ஆற்றிய நற்தொண்டைத் தொடரமுடியாது இறைவன் அவரை எம்மிடமிருந்து பிரித்து ஒரு மாதமாகின்றது.

-வைத்திய அதிபர், ஊழியர்கள்

(அரசினர் வைத்தியசாலை காரைநகர்.)

மானிப்பாய்

### இந்துக்கல்லூரி மாடிக் கட்டடம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் தொழில் நுட்ப பிரிவுக்கான இருமாடிக் கட்டடம் ஒன்று, சுமார் இரண்டரை லட்ச ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

இக்கட்டிடத்தை இக் கல்லூரியின் பழைய மாணவர்களாக இருந்தவர்களான கொழும்பிலுள்ள பிரபல தனியார் நிறுவனமொன்றின் உரிமையாளர்கள் தங்களது அன்பளிப்பாக இக்கல்லூரிக்கு அமைத்துக் கொடுக்கின்றனர். கட்டட வேலைகள் முடிவடைந்ததும் அடுத்த ஆண்டில் புதிய தொழில் நுட்பப்பிரிவு இங்கு ஆரம்பிக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

### பேசாலை இந்துமாமன்றம்

(மன்னார்)

பேசாலை இந்து மாமன்ற அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் டாக்டர் பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் - எம். மலராசா, உப தலைவர் - பொ. இராமலிங்கம், செயலாளர் - எஸ். பி. சுத்தரராஜ், துணைச் செயலாளர் - ஆர். சத்தியசீலன். பொருளாளர் - ஆர். ஜெயகுமார். 9பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

ஆஸ்பத்திரியில்

### மருந்து கட்டும் துணிகள் இல்லை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் மருந்து கட்டும் துணிகளுக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவுகிறது. இங்கு காயங்களுக்கு மருந்து கட்டச் செல்லும் நோயாளர்கள் தம்முடன் சீலைத் துண்டுகளையும் எடுத்துச் செல்லவேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

உள்ளொன்று புறம் பொன்று இல்லாது இருந்தாலன்றி, களங்கமற்ற நேர்மை இருந்தாலன்றிக் கடவுளை அறிந்துணர முடியாது. கோணல் புத்தியுடையவரிடமிருந்து கடவுள் வெகு தொலைவிலேயே இருக்கின்றார்.

— ஸ்ரீராமகிருஷ்ணர்

## நமது நோக்கு

### சுகாதார வாரம்

யாழ்ப்பாண மாநகர சபை இம்மாத இறுதியில் சுகாதார வாரம் கொண்டாடுவதற்குத் தீர்மானித்திருக்கிறது. சுகாதாரவாரத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு பொதுமக்கள், வர்த்தகர்களிடமிருந்து பத்தாயிரம்ரூபாய் வசூலித்துள்ளதாகவும் சபைநிதியிலிருந்து பத்தாயிரம் ரூபாயை இதற்கென ஒதுக்குவதென்றும் மாநகரசபைதீர்மானித்திருக்கிறது. இந்தத்தொகையும் செலவுக்குப் போதாவிட்டால் மேலும் சபை நிதியிலிருந்துபணம்கொடுப்பதென்றும்சபை தீர்மானித்திருக்கிறது.

சுகாதாரம்பற்றி மக்களுக்குப் பிசாரம் செய்வதற்கு இந்தச் சுகாதார வாரம் கொண்டாடப்படவிருக்கிறதாம். கட்டுரைப் போட்டி நடத்துவதென்றும், கலை நிகழ்ச்சிகள் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு வாரம் யாழ்ப்பாண நகரம் சுகாதாரம்பற்றித் தெரிந்து சுகாதாரமாக விளங்கப்போகிறது.

வீதிகளில் குப்பை கூழங்களை ஒரு வாரத்துக்குக் காணமுடியாமலிருக்கப் போகிறது!

யாழ் நகரவீதிகளிலும் ஒழுங்கைகளிலும் மழை நீரோ வேறு தண்ணீரோ தேங்கி நின்று நகரை அசுத்தப்படுத்தாது; நுளம்பு உற்பத்தியும் நின்றுவிடும்!

யாழ். நகரிலிருந்து நுளம்பும், ஈயும் ஒரு வாரத்தில் ஒழித்துக்கட்டப்பட்டுவிடும்!

யாழ். நகரிலுள்ள உணவுச் சாலைகளும்,சிற்றுண்டிச் சாலைகளும் ஒரு வாரத்தில் சுத்தமாகவும்,சுகாதாரமாகவும் துலங்சப்போகின்றன!

யாழ். நகரிலுள்ள வடிகால்வாய்களெல்லாம் சேறு சகதி நீங்கி தண்ணீர்தேங்கி நிற்காமல் வழிந்தோடும் காட்சியையும் இந்த ஒரு வாரத்தில் காணலாம்!

'இவ்விடத்தில் குப்பை கொட்டாதீர்; மீறுவோர் தண்டனைக்குள்ளாவர், மாநகர முதல்வரின் கட்டளைப்படி' என்று நகரில் பல இடங்களிலும் காணப்படும் சுலோகங்களுக்குப் பக்கத்தில்ஒரு குப்பையைக்கூட சுகாதார வாரத்தில் காண முடியாது!

கட்டாக்காலி கால்நடைகளையும், நாய்களையும் இந்த ஒரு வாரத்தில் யாழ். நகரில் தேடித் திரிந்தாலும் காணமுடியாது!

மொத்தத்தில் யாழ்ப்பாண நகரமே உலகிலேயே சுத்தத்திற்கும் சுகாதாரத்துக்கும் பெயர்பெற்ற நகரமாக சுகாதார வாரத்தில் திகழப்போகிறது.

இப்படிக் கற்பனைசெய்து பார்த்துக்கொள்வதுடன் திருப்திப்படவேண்டியது தான்!

உண்மையில் இருபதாயிரம் ரூபாய் செலவிட்டு சுகாதார வாரம் கொண்டாடவேண்டியது அவசியம்தானா?

இந்தப் பணத்தை யாழ். நகரில் சேறும் சகதியும், நீரும் தேங்கி நுளம்பை உற்பத்திசெய்துமக்களுக்குப் பலவித வியாதிகளை ஏற்படுத்தும் ஒரு வடிகால் வாயையாவது சுத்தம் செய்யலாம்!

நீர் தேங்கி, நீச்சல் குளமாகக் காட்சியளிக்கும் ஒரு ஒழுங்கையிலாவது நீர் ஓடக் கூடியதாக இந்தப்பணத்தில் ஒரு சிறு வடிகால்வாயாவது அமைக்கலாமே!

சுகாதார வாரம் கொண்டாடுவதற்குச் செலவாகும் பணம் யாழ். நகரில் ஒரு சிறு பகுதியையாவது சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருப்பதற்குச் செலவிட்டால் பயனுள்ளதாக இருக்கும்.

சுகாதார வாரக் கொண்டாட்டம் வீண் செலவு என்பதே நமது அபிப்பிராயம்; பொதுமக்களும் இதை ஏற்றுக்கொள்வர் என்பதே எமது நம்பிக்கை.

### இன்று கலைமகள் விழா

# திருவருளை வழிபட்டு பெருவாழ்வு பெறுவோம்

— வித்துவான் சி. ஆறுமுகம் —

ஒன்று பரம் பொருள். அதுவே சிவம். அதன் வல்லமையே ஆதிசத்தி. ஆதிசத்தியை உமாதேவி என்றும் அழைப்பர் ஆதிசத்தியை மூன்றாகவும், ஏழாகவும், ஒன்பதாகவும் கொண்டு வழிபடும் வழக்கம் இந்துக்களின் நெடுங்கால வழக்கம் மூன்று சத்திகளும் உலகுயிர்களுக்கு முறையே வீரமும், செல்வமும் கல்வியும் சிறப்புற வழங்குவன. இச்சத்திகள் மூன்றும் தாயாகப்போற்றி வழிபடப்பெற்றுவருகின்றன இவற்றை முறையே துர்க்கை, திருமகள், கலைமகள் என்று போற்றுதல்நம்மரவு.

#### பேராண்மையும் ஊராண்மையும்

வீரம் என்பது அஞ்ச வேண்டுபவற்றுக்கு அஞ்சி, நெஞ்சம் அசையாது நிற்கும் உறுதி, தீமையினின்றும் தன்னையும், பிறவுயிர்களையும் காக்க உதவுவது வீரப்பண்பு. இதனைத் திருவள்ளுவர் 'பேராண்மை' என்பர் 'பேராண்மை என்பதறுகண்' என்பது திருக்குறள். தறுகண்மை ஒன்றுக்கும் அஞ்சாமை. வீரத்தினுள்ளும் மிக மேலான வீரம் ஒன்றுண்டு. அதனை 'ஊராண்மை' என்பர் வள்ளுவர். ஊராண்மை உபகாரியாந்தன்மை. பேராண்மையின் அதியுன்னதமான கூரியநிலையே ஊராண்மை இது 'தழிஞ்சி' என்று தமிழ் நூல்களில் போற்றப்படுகிறது. தழிஞ்சி-தழுவிக் கொள்ளல், அஃதாவது பகைவனுக்கும் இரங்கங்காட்டுதல். போர்க்களத்தில், எதிரி, படையிழந்து சோர்ந்து நிற்கும் போது அவனைக்கொன்றுவிடாமல் அவன்மீது இரக்கங்காட்டி 'இன்றுபோய்ப்போர்க்கு நாளை வா' என நல்கும் வள்ளல் தன்மையே ஊராண்மையாகும்.

#### துர்க்காதேவி

இத்தகைய பேராண்மைக்கும் ஊராண்மைக்கும் உரிய சத்தியே துர்க்கை. அவளேஉருத்திரமூர்த்தியின் உயிர்ச்சத்தி துர்க்கம் என்பதன் பொருள் அகழி என்பது அகழி, அரணைக்காப்பது போல உயிர்க்குலங்களைப் பாதுகாப்பவள். துர்க்காதேவி ஆகவேதான் வீரத்துக்குத்துர்க்கையை அதிதெய்வமாகக் கொண்டனர் நம்முன்னோர். கன்னித்திங்களாகிய புரட்டாதி மாதம், சத்திவழிபாட்டிற்கு உகந்த காலம். புரட்டாதி மாதத்து வளர்பிறைப் பிரதமை முதல் ஒன்பது நாட்களையும் நவராத்திரியெனக் கொண்டு சத்தியைப்போற்றி அரும்பேறு பெறலாம் என்பது நம்முன்னோரின் அசையாத நம்பிக்கை. இந்துசமுதாயம் சத்தி விரதத்தினைத் தலையாய விரதமாகக்கொண்டு இன்றும் விளங்குகின்றது! கொற்றவை என்றும் துர்க்கை என்றும் காளி என்றும் வேறுபட்ட பெயர்சூட்டி வழிபடினும் இவ்வழிபாடு வீரத்துக்குரியவழிபாடு என்பதை நாம் மறக்க முடியாது. வங்காளதேசம் காளிவழிபாட்டின் இருப்பிடம். உலகம்போற்றும் உத்தமரான ஞானி இராமகிருஷ்ண பரமஹம்சர் கல்கத்தாவில் காளிவழிபாடு புரிந்துவந்த பெரியார் அவர் கண்ட உலகமாதா காளியாகவே காட்சி கொடுத்தாள். பாரத நாட்டில் மட்டுமன்றிக் கடல்கடந்து இந்து நாகரிகம் பரவிய இடங்களிலெல்லாம் நவராத்திரி வழிபாடு நன்குநடைபெறுகின்றது பாரதநாட்டில் மைசூரில் 'தசரா' என்ற பெயரில் நவராத்திரிவிழா நன்கு நடைபெறுகின்றது. விஜயதசமியையும் சேர்த்தே அவர்கள் பத்து நாள் விழாவாகக் கொண்டாடுகின்றனர். சத்திக்குக் கொலுவமைத்து முதன்மை வழங்கி ஒன்பது நாட்களும் கொண்டாடப்படும்.

#### இலக்குமி

இவ்விழாவின் அடுத்தமூன்று நாட்களும் செல்வத்துக்கு அதிதெய்வமாகிய இலக்குமிக்கு உரியவை. மகாலக்குமி திருமாலின் சத்தி. அவளே திருமகள்! செல்வம் நமக்கும் பிறர்க்கும் பயன்படவேண்டும். நல்வழியின் பொருள் ஈட்டப்படவேண்டும். பாடுபட்டு உழைத்துப் பங்கிட்டு உண்பதே பண்டைத் தமிழ்ப்பண்பு. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் தலையாயஅறமென்பர் வள்ளுவனார் 'செல்வத்துப் பயனே ஈதல்' என்பது புறநானூறு உயர்த்திப் பேசும் அறம் செல்வத்தின் நிலையாமையை உணர்ந்து அதனைப் பலருக்கும் பயன்படுத்தி நல்வாழ்வு வேண்டும். அதற்கு இத்தகைய வழிபாடு துணைபுரியும். செந்தாமரையில் வீற்றிருப்பவள் என்று திருமகளை நம்மவர் போற்றி வருகின்ற

(5-ம் பக்கம் பார்க்க)

## வாணி விழா

இந்து மக்கள் வாழுமிடமெல்லாம் வாணி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்று சிறப்புகளையும் மனிதகுலம் முழுமையும் பெற்று வாழ்வதற்கு விருப்பப்படுகிறது. கல்வியும், கலாசாரமும் மனிதனுக்கு வசப்படுகிறபோது ஏனைய செல்வங்களும் அவனுக்குக் கிடைக்க வழிபிறக்கின்றது. 'அம்பிகையை சரண் புகுந்தால், யாவும் அவள் அருள்வாள்' என்றார் பாரதி, இவ்வாணி விழாக்காலத்தில் எல்லோருக்கும் எல்லா நலமும் கிட்ட வாணியை வேண்டுவோமாக.

யோகேந்திரா துரைசுவாமி
மாவட்ட அமைச்சின் செயலாளரும்,
அரசாங்க அதிபரும்.

## மக்கள் கருத்து

### மேலதிக பஸ் சேவை

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் யாழ் சாலை,யாழ்-காங்கேசன்துறைப் (769) பாதையில் மேலதிக பஸ்களை அண்மையில் சேவையில் ஈடுபட்டிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். ஆனால் இதற்காக ஈடுபடுத்திய பஸ்கள் வேறு பாதையில் ஈடுபடுத்தப்பட்ட பஸ்களேயாகும். குறித்த இம் மேலதிக பஸ்கள் ஓடிய முன்னைய பாதைப் பிரயாணிகள் அவ்வேளையில் போக்குவரத்தில் திருப்தியடைந்துள்ளனரா? இல்லையே. ஏனைய பாதைகளின் பிரயாணிகளும் பிரயாணத்தில் திருப்தியுறாத நிலையில் குறிப்பிட்ட ஒரு பாதைக்கு மட்டும் மேலதிக பஸ்களை ஈடுபடுத்தியிருப்பது கவலைக்குரியது. இம்மேலதிக பஸ்களை ஏனைய பிராந்திய சபையிடம் இருந்து பெற்றிருந்தால் பரவாயில்லை. யாழ். சாலையினர்மேலும்வேறுபாதைகளுக்குத் தமது சேவையை விஸ்தரிக்கவேண்டிய இன்றுள்ள நிலையில் குறித்த இச் சேவை கேலிக்கூத்தே.

குறித்த இப்பாதையில் தனியார் சேவைக்கு முன்பே இத்தகைய மேலதிக சேவையைக்

(5-ம் பக்கம் பார்க்க)

## நாடும் நடப்பும்

கடந்த சில தினங்களாக யாழ் நகரில் பல பகுதிகளிலும் மாலை 6 மணிக்கும் இரவு 10 மணிக்குமிடையில் 'மின்சாரவெட்டு' ஏற்படுகிறது. பாவனையாளர்கள் மாநகர சபை மீதுதான் குற்றத்தைச் சுமத்துகிறார்கள் பலர் மேயரிடமே புகார் தெரிவித்துவருகின்றனர்.

ஆனால் இந்த மின்வெட்டுக்கும் மாநகரசபைக்கும் தொடர்பே இல்லையென்று மாநகரசபை மின்சாரப்பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

எங்கோ ஓரிடத்தில் ஏதோ நடந்துவிட்டது. இலங்கை மின்சாரசபையைச் சேர்ந்த நிபுணர் கோஷ்டியொன்று கொழும்பிலிருந்து வந்து திருத்திக்கொண்டிருக்கிறது!

இந்த மின்சாரம் என்னென்ன கூத்துக்களைத்தான் செய்கிறது.

0 0 0

திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் குடியுரிமையை ஏழு வருடங்களுக்கு நீக்கி வைப்பதென்று பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றிவிட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அமிர்தலிங்கம் ஜனநாயகத்துக்காக நல்ல முறையில் வாதாடியிருக்கின்றார்.

**என்னதான் வாதாடி என்ன பயன்? பெரும்பான்மை ஜனநாயகம்தானே வெல்லும்!**

சுதந்திரக் கட்சி இப்பொழுது ஆட்சி பீடத்திலிருந்து இப்படியொரு தீர்மானத்தைக் கொண்டுவந்திருந்தாலும் அமிர்தலிங்கம் இப்படித்தான் வாதிட்டிருப்பார். ஆனாலும் தீர்மானமும் இதேபோல் நிறைவேற்றப்பட்டுத்தானிருக்கும்!

அமிர்தலிங்கத்தின் மீதும் மற்றும் மூன்று கூட்டணி எம். பிக்கள் மீதும் கைவைத்து அவர்களின் குடியுரிமையை மட்டுமல்ல அவர்களின் சொத்துக்களையுமே பறிமுதல்செய்வதற்கு முன்னைய அரசின் முக்கிய அமைச்சர் பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயகா நடவடிக்கை எடுத்தார். முன்னைய பிரதமர் திருமதி சிறிமாவும் இதைத் தட்டிக்கேட்க முன்வரவில்லை!

[5-ம் பக்கம் பார்க்க]

## பாடிட அருள்வாய்

பாவலர் நாவலர் யாவரின் நாதொறும்
பாரதியேயென்றும் நிறைகுவாய்-அருள்
வாரிதியென்னவே பொழிகுவாய்-யானும்
பாவலன் என்றெண்ணிப் பாடிடும் என் பாட்டை
பாரதி ஏற்றதை மகிழுவாய்-அமுத
வாரிதி எனப்பாட அருளுவாய்!!

-முருகு

## பூமகளைப் போற்றிடுவோம்

வெள்ளை பனிச் சென்னும்
வெண்மலரும் ஏந்திவரும்
கொள்ளை மனம் போகும்
கோமகனும் போற்றி என்னும்
கிள்ளை மொழி பாடும்
கீர்த்தி சொல்லும் வல்லிமாலை
அள்ளி மலர் தூவித்
தாள் பணிந்தால் தரணி உய்யும்.

சக்தி அவள்தானே
சஞ்சலத்தைத் தீர்க்கும் ஒன்று
பக்தி அதில்தானே
பாருலகில் ஆக்கம் அவள்
மூத்தி அவள் அருளே
மூவுலகும் கண்ட ஒன்று
புத்தி போற்ற வரும்
பூமகளைப் போற்றிடுவோம்.

-மேலைப்புலோலி
மு. சு. கதிர்காமத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருளை வழிபட்டு...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

ணர். நடுவிலுள்ள மூன்று நாட்களிலும் விரதம் இருந்து திருமகளைப் போற்றி வழிபடின் அவள் ''தனந்தரும்''; ''நல்லன எல்லாந்தரும்''. இஃது அபிராமி பட்டர் போன்ற மெஞ்ஞானிகள் கண்ட உண்மை.

## கலைத்தெய்வம்

நவராத்திரியின் இறுதி மூன்று நாட்களும் கல்விக்கு அதிதெய்வமாகிய கலைமகளை வழிபடுவதற்கு உரியவை. கலைத்தெய்வமாகிய கலைவாணி வாக்கின் அதிபதி அவன் பிரமனின் சத்தி. கலைவாணி தூய்மையை இருப்பிடமாகக் கொண்டவள். வெள்ளைக்கலையும், வெள்ளைப் பணியும், வெள்ளைக் கமலமும் அவள் விரும்புவன. உள்ளம் தூய வெள்ளையுள்ளமாக இருப்பின் அங்கே கலைமகள் களிநடம் புரிவாள் என்பதே உட்குறிப்பு. ''தெள்ளு தமிழ்க் கலைவாணி'' என்று தித்திக்கப் பாடுகிறார் பாரதியார்- 'சகலகலாவல்லியே' என்று அழைக்கின்றார் குமரகுருபரர். 'சரியாசனத்து வைத்த தாய்' என்று துதிக்கிறார் கவிகாளமேகம். 'மருக்கோல நான் மலராள் என்னையாளும் மடமயிலே' என்பது கவியரசன் கம்பன் வாக்கு. 'நாவிற்றிருந்த புலமாமகள்' என்பது திருத்தக்கதேவர் செந்தமிழ்க்கவித் தொடர். 'சிந்தா தேவி', 'செழுங்கலை நியமத்து நந்தா விளக்கே! நாமிசைப் பாவாய்'' என்று அடுக்கியடுக்கிப் பாடுகின்றார் சாத்தனார். 'ஆயகலைப் பாவை' என்பது இளங்கோவின் அமுதமொழி. இவ்வாறே செந்தமிழ்ப் புலவர் மட்டுமன்றி மகாகவி காளிதாசன் போன்ற பெருங் கவிஞர்களும் கலைவாணியை வியந்து புகழ்ந்து பாடியுள்ளனர். பரத கண்டத்தில் பல்வேறு மதத்தினரும் கலைத்தெய்வ வழிபாட்டில் ஒன்றுபட்டு நின்றனர். கலைத்தெய்வ வழிபாட்டில் தூய்மையுடன், செயற்பாடும் இணைந்திருத்தல் வேண்டும்.

வெறும் பூசை புரிவதுடன் மட்டும் கலைத்தெய்வ வழிபாடு முடிந்துவிடவில்லை. வீடுதோறும் கலைகள் விளங்கியொளிர வேண்டும்! வீதிகள் தோறும் கலலூரிகள் வானளாவி எழுந்து நிற்க வேண்டும்! இதுவே உண்மையான கலைத் தெய்வ வழிபாடாகும். 'அறிவை வளர்த்திடல் வேண்டும் மக்கள் அத்தனை பேருக்கும் ஒன்றாய்' என்பது பாரதியார் அமுதமொழி. கல்வித் தருமமே தலைசிறந்த தருமம். 'அன்னயாவினும் புண்ணியங்கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'' என்பதும் பாரதியின் குரலே. கல்வியே நாட்டின் கருந்தனம் - பெருஞ் செல்வம். 'செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்' என்பர் வள்ளுவனார் - கல்விப்பணிபுரிதலே உயர்ந்ததும், உண்மையானதுமாகிய கலைமகள் வழிபாடாகும்.

## விஜயதசமி

இவ்வாறு ஒன்பது நாட்களிலும் விரதமிருந்து சத்தி வழிபாடு புரிபவர் தாம் எண்ணிய எண்ணியாங்கு எய்துவர். இதற்கு எடுத்துக்காட்டே 'மானம்பு' என்பது. மகிடாசுர சங்காரமே மானம்பு ஆகும். மான் - சத்தி, அம்பு -பாணம். உலகில் கொடுமை நிகழும் போது சத்தி உருவெடுத்து வெளிவந்து தீமையை ஒழித்து நீதியை நிலைநாட்டுவாள். எங்கும் தருமம் தலைதூக்கும். பத்தாம் நாளாகிய விஜயதசமி வெற்றித்தினமாகும். விஜயம்-வெற்றி, தசமி-பத்தாம் நாள், விஜயதசமித் தினம் சாதாரண தினமா? உழைக்கும் மக்கள் எல்லோரும் சத்தியைப் போற்றி உள்ளத்தில் உறுதி பூணும் நாள் அது. ஆயுதபூசை புரியப்படும் அரும் பெரும் தினம் அது! கலைத்தெய்வமே சகல கருவிகளினதும் அதி தெய்வம். 'எழுதுகோல் தெய்வம்! இந்த எழுத்தும் தெய்வம்' என்ற பாரதியார், கலப்பையும் தெய்வம்! மண்வெட்டியும் தெய்வம்! சகல ஆயுதங்களும் தூய்மையானவை; தெய்வீக அம்சம் பெற்றவை. அவை விஜயதசமியன்று பூசையில் வைக்கப் பெற்றதும் புனிதம் உறுகின்றன! ஆண்டுதோறும் புனிதமாக்கிக்கொள்வதே அறிஞர் செயல்.

## பிறப்பின் பெரும்பயன்

செய்யுந் தொழிலே தெய்வம் என தேர்ந்து கற்பன கற்று, நடுநிலை தவறாது உழைத்து, விழுமிய விரம் பேணி முழுமையான வாழ்வு வாழ்வதே மனிதப் பிறப்பின் பெரு நோக்கமாகும். இதனை உணர்ந்து சத்தி வழிபாட்டின் தத்துவத்தை எங்கும் எடுத்துரைத்து மக்களை வையத்தில் வாழ்வாங்கு வாழவைப்பதே அறிஞர் கடனாகும். நம்பிக்கையுடன் அன்னையாகிய சத்தியை நாம் வழிபடின் அவள் பால் நினைந்தூட்டும் தாய்போல் இரங்கித் தண்ணளி புரிவாள். அவள் திருவடிகளே நமக்கு அடைக்கலம்.

''நம்பினோர் கெடுவதில்லை
நான்கு மறைத்தீர்ப்பு
அம்பிகையைச் சரண்புகுந்-
தால்
அதிக வரம் பெறலாம்.''

— மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

## விஜயதசமிவிழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை துவாரகலட்டிக் கண்ணகைஅம்மன் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமைவிஜய தசமிவிழாநடைபெறவுள்ளது.

# நாடும் நடப்பும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அதே அமிர்தலிங்கம் அவர்களுக்காக வாதாடினார்! ஆனாலும் குடியுரிமை பறி போய்விட்டது.

''முற்பகலில் செய்தவினை பிற்பகலில் விளையும்'' என்ற மொழி உண்மைதானே!

0 0 0

சாப்பாட்டுக் கடைகளில் சாப்பாடு விலை உயர்ந்துவிட்டது; ஆனால் தரமே மிகவும் இறங்கிவிட்டது.

நாட்டின் சில இடங்களில் கூட்டுறவுச்சங்கங்கள் நல்ல முறையில் சாப்பாடு தயாரித்துக்குறைந்தவிலையில் வழங்கி வருகிறதாம்.

இப்படி யாழ் நகரிலும் ஓர் உணவுச்சாலையை யாழ் நகர பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பித்தாலென்ன?

யாழ். நகர பலநோக்கக் கூட்டுறவுச்சங்கத்தின் தலைவர் திரு. மு ஆலாலசுந்தரத்திடம் இதுபற்றிக் கேட்டேன்.

அப்படித்தான் யோசிக்கிறோம். நகரில் பொருத்தமான இடத்தில் பொருத்தமான கடை கிடைப்பதுதான் கஷ்டமாக இருக்கிறதென்றார்.

பலநோக்கக்கூட்டுறவுச் சங்கம் தனக்கென சொந்தமாகக் கட்டிவரும் புதிய கட்டிடம் முற்றுப்பெறும் வரை உணவுச் சாலை திறப்பது யோசனை உருவில்தானிருக்குமோ!

- ஊர்சுற்றி

தொடர்ந்து பாலர் பாடசாலை ஆரம்பமும் வித்தியாரம்பமும் இடம்பெறும். (அ)

ஃ ஃ ஃ

## யாழ்ப்பாணத்தில்

யாழ். திவ்யஜீவன சங்க மண்டபத்தில் நாளை முற்பகல் விஜயதசமியன்று. ஜோதி சுவாமி வித்தியாரம்பம் செய்து வைப்பார்.

# மேலதிக...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்கமுன்வராத யாழ். சாலையினர், தற்போது தாமாகவே வலிந்து முன்வந்துள்ளமை ஒரு விவேகமற்ற செயலென்றே தோன்றுகிறது. போக்குவரத்துச் சபையின் நோக்கம் பிரயாணிகளின் திருப்தியும், தரமான சேவையுமாகவே இருக்கவேண்டும். மக்கள் கூடிய பணத்தைக் கொடுத்தும் தனியார் சேவையையே விரும்புகிறார்கள். காரணம் குறுகிய நேரத்தில் தமது பிரயாணத்தை மேற்கொள்வதுடன், சொகுசான சந்தோஷமான, திருப்தியான பிரயாணமும் கிடைக்கிறது. இவற்றை போக்குவரத்துச் சபையினர் பிரயாணிகளுக்கு அளிக்கத் தயாராக இருந்தால் தனியார் சேவையினர் தாமாகவே சேவையினின்றும் பின்வாங்குவர்.

பஸ்தரிப்புகளில் ஒரிருவர் நின்றால் பஸ்களை நிறுத்துகிறார்களில்லை. அத்துடன் பஸ்களை நிறுத்தாது ஓடிக் கொண்டிருக்கும்போதெ ஏறும் படியும், இறங்கும்படியும் நிர்ப்பந்திக்கிறார்கள். இதனால் வயோதிபர்களும், நோயாளிகளும் பெரிதும் பாதிக்கப் படுகிறார்கள், இதனால் மேலும் மேலும் தனியாரின் சேவையையே பிரயாணிகளும் நாடுகின்றனர்.

அத்துடன் தரமான சிறந்த சேவையைக் கொடுக்கவேண்டுமென்பதற்காகவே அரசாங்கம் தனியார் சேவையையும் அனுமதித்தது என்பதை மனத்தில் கொள்வதுடன் தரமான சேவையை ஏனைய பாதைகளுக்கும் வழங்க முன்வரவேண்டும்.

க. இரத்தினசிங்கம்
தெல்லிப்பழை.

# "ஆசிரிய நியமனம் வேண்டும்"

(உடுப்பிட்டி)

கத்தோலிக்க மாணவர் தொகைக்கு ஏற்ப கத்தோலிக்க அதிபர்கள், கத்தோலிக்க கல்வி அதிகாரிகள் நியமிக்கப்படல் வேண்டும்'' என்று யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெற்ற யாழ். மறை மாவட்டக்கத்தோலிக்க ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கோரப்பட்டுள்ளது.

பிரஸ்தாப கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

• கத்தோலிக்க ஆசிரியர் அனைவரும்கத்தோலிக்க பிள்ளைகள் கல்வி பயிலும் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் சில வருடங்களாவது சேவையாற்றத் தம்மைத் தியாகம் செய்ய வேண்டும்.

''ஒரு பாடசாலையில் கத்தோலிக்க சமயப் பிள்ளைகள் 15 பேர் கல்வி கற்றால் அப் பாடசாலையில் கத்தோலிக்க மறைக் கல்வி கற்பிக்கக் கூடிய கத்தோலிக்க ஆசிரியர் நியமிக்கப்படல்வேண்டும். கத்தோக்க பிள்ளைகள் பெரும்பான்மையினராகவுள்ளபாடசாலைகளில் கத்தோக்க அதிபர்கள் நியமிக்கப்படல் வேண்டும். பயிற்சி பெற்ற கத்தோக்க மறை ஆசிரியர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படல் வேண்டும்.

# வீடுஉடைத்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சங்கானைப் பொலிசுக்குப் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து சங்கானைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பிடி மதாசா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி, விசாரணை செய்து சந்தேகத்தின் பேரில் இருவரை விசாரணைக்குட்படுத்தியுள்ளது. (க)


புரேற்றினெக்ஸ்
புரதச்சத்து நிறைந்தது




இளம் பிள்ளைகளின் தசை நார்,
எலும்பு,மூளை ஆகியவற்றை விருத்தி
செய்வதற்குத்தேவையான புரதச் சத்தும்
நோய்கள் வராமற் தடுக்கும் சக்தியும்
கொண்ட புரேற்றினெக்ஸ், விற்றமின்களும்
கனிப்பொருட்களும் நிறைந்தது.

இன்றே ஒரு போத்தல்
புரேற்றினெக்ஸ்
வாங்குங்கள்

சில்லறை விலை
50 கிராம் – ரூபா 14-65
125 கிராம் – ரூபா 28-25

Grant K & E 3062


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரைமாநாட்டில் தமிழ் இலக்கியக் கண்காட்சி

## மதுரை மேயருக்கு யாழ். மேயர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

1981ம் ஆண்டு ஜனவரியில் மதுரை மாநகரில்இடம்பெறும் ஐந்தாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் ஈழத்து தமிழ் இலக்கியக் கண்காட்சி ஒன்றை நடத்துமாறு உலகத்தமிழ் பண்பாட்டுக்கழகத்தின் இலங்கை கிளைஅனைத்துலகத் தமிழாராய்ச்சிமன்றத்தின் இலங்கைக் கிளையினால் அழைக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகர முதல்வர் திரு. எஸ். கே. பாலகிருஷ்ணனுக்கு யாழ். மாநகரமுதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் அனுப்பியுள்ள கடிதத்தில்மேற்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார்,

அக்கடிதத்தில் மேலும்கூறப்பட்டிருப்பதாவது:

ஈழத்து தமிழ் இலக்கியக் கண்காட்சியுடன் இணைத்து, ''தமிழ் உலகம்—உலகத் தமிழரும் அவர்கள் பிரச்னைகளும்'' என ஒரு கண்காட்சியை நிர்மாணிப்பதற்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பொதுச்செயலாளர் குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் வெளியிட்டுள்ளார்.

மேற்படி கண்காட்சியில் தமிழர் வதியும் ஒவ்வொரு நாட்டுக்கும் தனித்தனியாக (கண்காட்சிக்) கூடங்கள் ஒதுக்கப்படும். அவர்களதுஎண்ணப்படி கண்காட்சியை நிர்மாணிப்பதற்கு தமிழகத்தில் ரூபா 5000 தேவைப்படும். அவர்களது பிரதிநிதி ஒருவர் எதிர்வரும் நவம்பர் மதுரை வந்து, அங்கு தங்கியிருந்து கண்காட்சியை நேரடியாக நிர்மாணிக்க வேண்டும்.

தமிழக முதலமைச்சர் தலைமையில், தமிழ்பண்பாட்டுக்கு அமைய பட்டுக்குடை, ஆலவட்டம், நிலபாவாடை, பதாகைகள் சகிதம் மலேசியா, சிங்கப்பூர், பர்மா, தென்னபிரிக்கா, மொறிசியஸ், பீஜீ, றியூனியன் பிரதிநிதிகளை ஊர்வலமாக அழைத்துச் சென்று ''உலகத் தமிழரும் அவர்கள் பிரச்னைகளும்-' பற்றிய இக் கண்காட்சியைத் திறந்துவைக்க வேண்டுமென்பதே ரா. கனகரத்தினத்தின் பெருவிருப்பமாகும்.

## ருல் பிடிக்கச் சென்றவர் நீர்ச்சுழியில் சிக்கி மரணம்


(மன்னார்)

ருல் பிடிக்கச் சென்றவர் நீர்ச் சுழியில் சிக்கி மரணமானார்.

எருக்கலம்பிட்டி கடலில் ருல் பிடிக்கச் சென்ற எல். ஏ. கபூர் என்பவரே நீர்ச்சுழியில் சிக்கி மரணமானார், இவரைக் காப்பாற்ற எடுத்துக்கொண்ட முயற்சி தோல்வியடைந்ததாகவும், இவரது சடலம் மறுநாளே கண்டுபிடிக்கப் பட்டதாகவும் மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

இம்மரணம் சம்பந்தமாக மரண விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி ஜனாப் எம். பி. ஏ, ஜப்பார் ஜே. பி. விபத்துமரணமெனத் தீர்ப்பளித்தார்.


இப்போது
அக்ரோக்சோன்
களை நாசினி போத்தல் லேபல் நிறங்கள்
மஞ்சளும் ஊதாவும்




அக்ரோக்சோன் முந்திய பச்சை நிற போத்தல் லேபலுடன் இப்போது வருவதில்லை. இப்போது அந்த லேபல் மஞ்சள்-ஊதா நிறங்களில் அச்சிடப்படுகிறது. ஆனால் பொருளின் தரத்தில் எந்தவித மாற்றமும் இடையாது. சக்தி வாய்ந்த அக்ரோக்சோன் களைநாசினியை நெல் வயல்களில் வழக்கம் போல் பாவியுங்கள்.

விவசாயிகள் நம்பிப் பாவிக்கும் வீறு மிக்க களைநாசினி அக்ரோக்சோன்

CIC கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
த. பெ. எண் 352,
கொழும்பு.
தொலைபேசி: 28421-5

| நிகர அளவு | | சில்லறை விலை |
|---|---|---|
| 450 மி. லீ. | போத்தல் | ரூ. 23.90 |
| 4.5 லீட்டர் | கொள்கலம் | ரூ. 296.60 |


# எருக்கலம்பிட்டி ஆஸ்பத்திரி விஸ்தரிக்கப்படும்

## மாவட்ட அமைச்சர் தகவல்

(மன்னார்)

''சுயஉதவி விடமைப்புத் திட்டத்தின் கீழ் சேருவில தொகுதி மக்கள் 2 மாதத்துக்குள் வீடுகளைக்கட்டிமுடித்தனர். அதேபோல் நீங்களும் இந்த வீடுகளைக் கட்டிமுடிக்க வேண்டும்.''

இவ்வாறு எருக்கலம்பிட்டிப் பகுதியில் சுயஉதவி வீட்டுத் திட்டத்தின் கீழ் நிறுவப்படவுள்ள 50வீடுகளுக்கான அடிக்கல்லை நாட்டியபின் நடைபெற்ற கூட்டத்தில் மூதூர் எம். பி.யும், மன்னார்மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச். மஹ்றூப் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய எருக்கலம்பிட்டி ஐக்கிய தேசியக்கட்சி கிளைத்தலைவர் ஜனாப் பி. எம். எம். சாலிகு ஜே. பி. தமதுரையில்; ''எமது ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவின் தலைமையில் திறமையான அரசாங்கம்நடைபெற்றுவருகிறது. பிரச்னைகள் யாவும் சுமுகமாகத் தீர்த்து வைக்க படுகிறது. இந்த அரசாங்கம் பொருளாதார முன்னேற்றத்தில் புரட்சியைச் செய்துவருகிறது. ஏழை மக்களுக்கு வீடு, மற்றும் சகல வசதிகளும் செய்து கொடுக்கப் பட்டுவருகிறது. இன மதபேதமின்றி சேவைகள் செய்யப் பட்டுவருகிறது'' என்றார். இக் கூட்டத்தில் கலந்துகொண்ட மூதூர் எம். பி, யும், மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம், ஈ. எச். மஹ்றூப் எருக்கலம்பிட்டி ஆஸ்பத்திரி விஸ்தரிக்கப்பட்டு குறைகள் யாவும் விரைவில் நிவர்த்தி செய்யப்படுமென்றும்,

அடுத்தவருடம் மின்சார விநியோகவேலைகள் முடிவடையுமென்றும், மக்களுக்கு சிறப்பான தசதிகளைச் செய்து கொடுத்து அவர்களின் அன்றுட பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதுமே தமது நோக்கம் என்றும் அவர் கூறினார்.

## கலைமகள் விழாக்கள்

ஏழாலை சைவமகாஜன வித்தியாலயத்தின் நவராத்திரி விழாப் பரிசளிப்புவிழா இன்று மாலை கல்லூரி மண்டபத்தில் அதிபர் த. திருநாவுக்கரசு நாவேந்தன்) தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவை மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் ஆரம்பித்துவைப்பார். பிரதம விருந்தினராக கல்வி பிரதம அதிபாரி திரு. பொ. சிவபாதமும், சிறப்பு விருந்தினராக திரு. க. சிவகுருவும், மானிப்பாய் வட்டாரக்கல்வியதிகாரி திரு. ச. தனஞ்செயனும் கலந்து கொள்வார்கள். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

0 0 0

(மன்னார்)

மன்னார் அடம்பன் மகாவித்தியாலயத்தினரின் வாணிவிழா இன்று, நாளை, கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பரத நாட்டியம், வில்லிசை, நாடகம் ஆகியன இடம்பெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

காரைநகர் யாழ்நகர்க் கல்லூரியின் நவராத்திரி விழா இன்று முற்பகல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். நாளை விஜயதசமிநடைபெறும். (லவ)

0 0 0

(ஊர்காவற்றுறை)

தென்கரம்பன் சனசமூக நிலையத்தினர் நடாத்தும் கலைமகள் விழா இன்று சனிக்கிழமை மாலை நிலையத் தலைவர் திரு. வே. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது.

காவலூர் இளங்கோவடிகள் மன்றத் தலைவர் திரு. மு சோமசுந்தரம், திரு. எஸ், குகநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றுவர். நிலையமாணவர்களின் 'உதவிக்கு வந்தவன்' நாடகமும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். (கு)

0 0 0

(உடுப்பிட்டி)

கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் வாணி விழா இன்று சனிக்கிழமை நடைபெறுகிறது.

இவ்விழா கல்லூரி அதிபர் திரு. தோமஸ் ஈப்பன் தலைமையில் நடைபெறும். (அ)

0 0 0

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபையின் வாணி விழா நாளை மாலை வாரிவளவு திறந்த வெளியரங்கில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அ, சண்முகதாஸ் கலந்து கொள்வார்.

இவ்விழாவில் பரத நாட்டியம், கும்மி, காவடி போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

0 0 0

யாழ். வைத்தீஸ்வரவித்தியாலயத்தில் இன்று முற்பகல் வாணிவிழா நடைபெறும்.

இவ்விழாவில் வித்துவான் சி. ஆறுமுகத்தின் சிறப்புரையு, கல்லூரி மாணவர்களின் இசை, நடன' நாடக நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

0 0 0

(ஏழாலை)

ஏழாலை மேற்கு உதய சூரியன் அறிவகத்தில் இன்று கலைமகள் விழா நடைபெறவுள்ளது. (வெ)

## விவசாய அபிவிருத்தி நடவடிக்கை

(புலோலி)

புலோலி கமநலச்சேவைப் பிரதேசத்தில் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளைத்துரிதப்படுத்துவதற்கான விவசாய ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

யாழ். விவசாயத்திணைக்களம் இவ்விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னோடியாக இப்பகுதியில் இருந்து ஏழு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களை தெரிவுசெய்து அவர்களுக்குச் சாதனை முறைப் பயிற்சிகளும், போதனைகளும் அளித்தது.

தெரிவு செய்யப்பட்டபயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள் தற்போது இக்கமநலச்சேவை நிலையப்பிரதேசத்தில் பயிர்ச் செய்கைபற்றிய விபரங்கள், நிலத்தின் அளவுத்தன்மை, உற்பத்தித்திறன் கால்நடை வளர்ப்புச்சம்பந்தமான புள்ளிவிபரங்களைத்திரட்டி வருகின்றனர். (அ)

## பெண்ணின் கையைப் பிடித்தாராம்

(மட்டுவில்)

வீட்டினுள் அத்துமீறிப் புகுந்து, பெண்ணின் கையைப் பிடித்ததாக, றிசேவ்பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை சாவகச்சேரிப் பொலிஸ் சார்ஜன்ட் திரு. எஸ். சிவலிங்கம் கைது செய்து சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. வி. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் ஆஜர்செய்தார்.

நீதிபதி அந்த றிசேவ் பொலிஸ் கான்ஸ்டபிளை ரூபா 1000 பிணையில்செல்ல அனுமதிவழங்கி,மேல்விசாரணையை இம்மாதம் 21ம் திகதிவரை ஒத்திவைத்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசூலில் பெரும் சாதனை! 3-வது வெற்றி வாரம்!

ஆஹா! இது என்ன பெண்கள் கூட்டம்? பெண்குலத்தின் பெருமையை எடுத்துக் காட்டும் கோகிலா. தமிழ் வசனநடைக்கு பெருமை தேடித்தந்த கலைஞர் கருணாநிதி இவர்களைக் காண ராஜா வெண்திரையை நாடுங்கள். 20 நாட்களில் 1 லட்சம் பேர் பார்த்துவிட்டனர். இடத்துக்கு முந்துங்கள். இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி

ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.

ஜெய்சங்கர்-ஜெயசித்திரா—அசோகன் மற்றும் பலர் நடித்த

வண்டிக்காரன் மகன்

(ஈஸ்மன் கலர்)

## 2 கோல்களால் வெற்றி

(அரியாலை)

பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகத்திற்கும் யாழ். மத்திய கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகம் 2 : 0 கோல்களால் வெற்றியீட்டியது

போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (அ)

நாகம்ஸ் (சுன்னாகம்)

தினசரி 6-30, 930

சனி, ஞாயிறு 2-15

எம். ஜி. ஆர். -அஞ்சலிதேவி

மர்மயோகி

மனோகரா (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

எம்.ஜி.ஆர். - லதா - வாணிஸ்ரீ

ஊருக்கு உழைப்பவன்

எதிர்பாருங்கள்

ஒரேவானம் ஒரேபூமி

வெஸ்லி

(மானிப்பாய்)

தினசரி 6-30, 9-30,

சனி-ஞாயிறு 2-30

சிவாஜி - ஜெயலலிதா

தாய்

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 2-ம் திகதி

(சனிக்கிழமை)

(18- 10 -1980)

சோதிடக்கலாநிதி

மேடம்: இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம் பெறும், சிலருக்குப் புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பமும்ஏற்படலாம், மாதுருவழிப் பெருமைக்கும் இடமுண்டு.

இடபம்: புத்திரர்களால் சுகமும் தொழில்துறையில் வெற்றியும் உண்டு. இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும், இனசனமும் கூடும், இன்று தெய்வத்தின் அருளும் தாராளமாகக் கிடைக்கும்.

மிதுனம்: கழுகுப்பார்வை உங்களை வட்டமிடும், எதிரிகள் காத்திருப்பர், ஆயுத பீடைக்கும் இடமளிக்கலாம், எதிலும் அவதானம் வேண்டும்.

கடகம்: இல்லத்தில் இனிமை தவழும், வெளியிடத் தொடர்புகள் பெருகும், உறவினர் உதவியுடன் செல்வாக்கும் பெருகும்.

சிங்கம்: எண்ணத்தில் தடைகள் தோன்றும், ஏமாற்றம் உள்ளத்தை வாட்டும், நண்பர்கள் காலை வாரிவிடக் கூடும், நிதானம் வேண்டும்.

கன்னி: வசதிகள் பெருகும், மேலிடத்து ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் கல்வியில் முன்னேற்றம் உண்டு, இனிக்கும் செய்தியொன்று இன்று கிடைக்கும்.

துலாம்: செய்தொழில் மூலம் சிறப்பும் கிடைக்கும், பெரியவர்கள் ஆசி அவசியம் உண்டு. போட்டாபோட்டிகளில் வெற்றி உங்கள்பக்கம் இருக்கும்.

விருச்சிகம்: பொருள்வரவு திருப்திகரமாக இருக்கும், புத்திரர் வழியால் புகழும் கிடைக்கும், வணிகர்களுக்கு வியாபாரத்துறையில் வெற்றியுண்டு, புதிய உடன்படிக்கை ஒன்றிற்கும் இடமுண்டு.

தனுசு: முன்னேற்றப் பாதையில் இரும்புத்திரை தொங்கவிடப்படும், அதிக அலைச்சலுக்கும் இடமேற்படலாம், உடல்நலன் சிறிது பாதிக்கப்படக்கூடும், சுகாதாரம் வேண்டும்.

மகரம்: ஆசை அலைச்சலால் அவப்பெயருக்கு இடமுண்டு, குறுக்கு வழிகளில் வழிகளில் இறங்க வேண்டாம், வீட்டில் சிறுபிணி தலைதூக்கும், சிறிய விடயத்திற்குக் கூட பெருங்கோபம் தோன்றக்கூடும்.

கும்பம்: பணவிவகாரத்தில் திருப்திகரமான நிலை தென்படும், வசீகரப் பேச்சினால் மற்றவர்களை சொக்கவைப்பீர்கள், மேடைப் பேச்சாளர் பெரும் புகழ் அடைவர்

மீனம்: அதிக சிந்தனை அமைதியைக் கெடுக்கும், புதிய கோணத்திலிருந்து தாக்குதல் உருவாகும், உம்மிடம் உதவி பெற்றவர்களே இன்று கையை விரிப்பர், வரவிலும் மந்தநிலை தென்படும்.

திருமலை

க. வேலுப்பிள்ளை

## 1 கோலால் வெற்றி

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திற்கும் வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்திற்குமிடையே முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் 0-1 கோலால் வெற்றியீட்டியது.

திரு. அ. சிறீஸ்கந்தராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். (அ)

## 3 பிரிவுகளிலும் சென்.பற்றிக்ஸ் வெற்றி

(அரியாலை)

யாழ். சென்ற் பற்றிக்ஸ் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்கும் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்கு மிடையிலான! வருடாந்த உதை பந்தாட்டப் போட்டி ஹாட்லிக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலாம் பிரிவுக்கான போட்டியில் 1-3 கோல்களாலும் இரண்டாம் பிரிவுக்கான போட்டியில் 0-4 கோல்களாலும் மூன்றும் பிரிவுக்கான போட்டியில் 1-2 கோல்களாலும் சென்ற் பற்றிக்ஸ் கல்லூரி வெற்றியீட்டியது. (அ)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி காலை 10-30, பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 9-30 மணிக்கு 4 காட்சிகள்

கிதாலயா மூவிஸ் அளிக்கும்

மாத்தளை கார்த்திகேசுவின்

டீன்குமார், K.S. பாலச்சந்திரன், பரீனலை, விஜயராஜா நடித்த



'அவள் ஒரு ஜீவநதி'

சிறந்த தமிழ் திரைக் காவியம்.

ஹரன் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

சிவாஜி-பத்மினி

விஜயா-நாகேஷ்

பாலாடை

ஸ்ரீதர் - யாழ்நகர்

தினசரி 10-30,, 2-30 6-30 & 9-45.

பலகால இடைவெளியின்பின் மக்கள் திலகத்தின் புதுப் படத்தினைக் காணும் சந்தர்ப்பம்!

புரட்சி நடிகர் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர்.

புரட்சிக் கன்னி லதா

வில்லனுக்கோர் சக்கரவர்த்தி நம்பியார்

நாகேஷ், தேங்காய், நிர்மலா, கண்ணன் வி. கே. ராமசாமி மற்றும் பலர் நடித்த



மீனவ நண்பன்

வெலிங்டன்

(யாழ்நகர்)

தினசரி 3 காட்சிகள்

சனி-ஞாயிறு 4 காட்சிகள்

கே. பி. சுந்தராம்பாள்

ஔவையார்

லிடோ

(யாழ்நகர்)

Daily at: 10-30 am, 2-15pm, 4-45 pm, 7-15 pm, & 9-30 pm

RIVER OF THE GREAT CAYMAN

சாந்தி (யாழ்நகர்) போன்: 7642

தினசரி 4 காட்சிகள்

100-வது வெற்றித் திருநாளை நோக்கி......

நீயா?

"வெள்ளி விழா" வண்ணச்சித்திரம்

Next Attraction: "THE DIRTY DOZEN"

எதிர்பாருங்கள்: திசைமாறிய பறவைகள் கலர்

ராணி - யாழ்ப்பாணம்

காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45

கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்பிரியா

சட்டம் என் கையில்

([illegible] தவர்களுக்கு மட்டும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றிக்கோவுக்கு வேறு கிளைகள் இல்லை


ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

## யாழ். இந்து வாணி விழா

(யாழ்ப்பாணம்)
யாழ் இந்துக் கல்லூரி 'இந்து இளைஞர் கழகத்தினால் வருடாந்தம் கொண்டாடப்படும் வாணி விழா நாளை ஞாயிற்றுக் கிழமை கல்லூரியில் நடைபெறும். சிறப்பு அம்சமாக ''நவமலர்'' என்னும் சிறப்பு மலர் வெளியிடப்படும்.

## பாலுமகேந்திரா கைது!

சென்னை, அக். 17
பிரபல திரைப்பட டைரக்டர் திரு. பாலு மகேந்திரா இன்று சென்னையில் கைது செய்யப்பட்டார்.

பாஸ்போர்ட் பெற்றபோது தவறான தகவல் கொடுத்ததற்காகவே அவர் கைது செய்யப்பட்டார்.

இலங்கையர் என்பதை மறைத்து இந்திய பாஸ்போர்ட் பெற்ருர் என்று இவர் மீது குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

### அகில இலங்கை தமிழ்ப்பாடசாலை

# இசை, நடன, நாடக போட்டி முடிவுகள்

(உடுப்பிட்டி)
கல்வி அமைச்சினால் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடாத்தப்பட்ட அனைத்து இலங்கைத் தமிழ் மொழிப் பாடசாலைகளுக்கிடையிலான இசை, நடன, நாடக இறுதிப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

**தனி இசை**

கீழ்ப் பிரிவு—(பாரம்பரியம்) தி. இளங்குமரன் (வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலை) பீ. குமுதினி (தம்பிலுவில் சரஸ்வதி வித்தியாசாலை) ந. வரதன் (கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி)

கர்நாடகம் - ப. சுஜாதா (யாழ். இந்து பிரதம பாடசாலை), ஆ. பத்மவேணி (உவர்மலை தமிழ் வித்தியாலயம்). ப. தயாநிதி (வவுனிக்குளம் படி 3 மகாவித்தியாலயம்).

(புதிய ஆக்கம்) - செ. செல்வகுமாரி (அமிர்தகளி சித்தி விநாயகர் வித்தியாலயம்), நா. சாம்பசிவன் வவுனியா சைவப்பிரகாசவித்தியாலயம்), ம. ஜெகதீசன் (கரவெட்டி திரு. இருதயக் கல்லூரி).

மத்திய பிரிவு — (பாரம்பரியம்) - யே. றெனுட் (அளம்பில் றே. க. த. க. பாடசாலை), கு. சுகுமார் (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி), செ. ஜெயராசசிங்கம் (தம்பிலுவில் மகா வித்தியாலயம்)

(கர்நாடகம்) - பா. ரஞ்சினி (வேம்படி மகளிர் கல்லூரி), த. சுமதி (இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம்), எம். சீ. ஏ. மாஹிர் (கல்முனை சாஹிராக் கல்லூரி).

(புதிய ஆக்கம்) - ஏ. முகமது முபராக் (காத்தான் குடி அல்இரு வித்தியாலயம்) பா. சுரேந்திரன் (புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயம்).

மேற்பிரிவு — (பாரம்பரியம்) - மி. யசோதா (பருத்தித்துறை மெதடிஸ் த உயர் நிலைப் பாடசாலை), த. இந்திரா (புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம்), மு. கடம்பநாதன் (கல்முனை வெஸ்லி உயர்நிலைப் பாடசாலை.

(கர்நாடகம்) - அ. சோமசுந்தரம் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), பூ. இரஞ்சிதராணி (மட்டக்களப்பு சிசிலியா மகளிர் உயர்நிலைப் பாடசாலை), (மன்னர் நாணட்டான் மகா வித்தியாலயம்).

(புதிய ஆக்கம்) - க. நிலாவதி (மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி), பா. வசந்தி (ஆவரங்கால் நடராஜராமலிங்கம் வித்தியாசாலை).

(திங்கள் தொடரும்)

## ஈரான் - ஈராக் யுத்தம்

நியுயோர்க் அக் 17.
ஈரான் - ஈராக்யுத்தநிலைமை குறித்து ஆராய்வதற்காக ஐக்கியநாடுகள் பாதுகாப்புச்சபை இன்று கூடியது.

## யாழ்.லயன்ஸ்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
டும்'' என்று கோரும் தீர்மானம் கொண்டுவரப்பட்டு, விவாதிக்கப்படும். இத்தீர்மானத்தை லிபியா தாக்கல் செய்யும். அதனைத் தொடர்ந்து விவாதம் நடைபெறும்.

கடந்த இரண்டு வருடங்களாக யாழ் பாடசாலைகளுக்கிடையே இம்மாதிரியான 'ஐ. நா. பாதுகாப்புச்சபைக் கூட்ட'த்தையும் விவாத'த்தையும் யாழ். லயன்ஸ் கழகம் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## ஒழுங்கினங்களை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பத்தை ஏற்படுத்தும் விதத்தில் மக்களைத் தூண்டி விடுவதினால் இத்தகைய விவகாரங்களில் தீர்வுகாண முடியாது. ஒருநெருக்கடி நிலையின் போது ஒருவரின் போக்கைக் கொண்டே அவரின் குணதிசயங்களை அல்லது ஆற்றலை அறிந்து கொள்ள முடியும்.''

திருமதி பண்டாரநாயக்கா பொதுக் கூட்டங்களில் ஆற்றிய உரைகள் பற்றி பிரதமர் பிரேமதாசா குறிப்பிடுகையில்; நாட்டின் தலைமைப் பதவியை இப்படிப்பட்டவர்களிடம் எப்படி ஒப்படைக்க முடியுமென்ருர்.

''நிர்வாகத்தை தூய்மைப் படுத்தவும், அதிகார துஷ்பிரயோக குற்றத்தைச் செய்தவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கும் பொதுமக்கள் கடந்த பொதுத்தேர்தலில் இந்த அரசாங்கத்திற்கு • அதிகாரத்தை வழங்கியுள்ளனர். ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படுவதற்கு அத்தனகல தொகுதி உறுப்பினரே அங்கீகாரம் வழங்கியிருந்தார். ஆனால்பின்னர்ஆணைக்குழுமுன்னிலையில் சாட்சியமளிப்பதற்கு அவர் மறுத்து விட்டார். ஆணைக்குழு சம்பந்தமான அமைப்பு விதிகளுக்கு அவர் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை'' என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

## குடியுரிமையை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பின்னேக்கிய சட்ட ஆக்கத்தின் மூலம் ஒருவரைத் தண்டிப்பதும், கடுமையான தண்டனையை அவருக்கு வழங்குவதும் அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகளுக்கு முரணனதாகும்.

''சிறிமாவின் குடியுரிமையை பறிக்கும் இந்நடவடிக்கை ஒரு அரசியல் கொலையாகும். இவரின் குடியுரிமையைப் பறிப்பதனால் நாட்டிற்கோ, எதிர்க்கட்சிகளுக்கோ நன்மையில்லை. எதிர்காலத்திலும் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும்.

''இதேசபை தேசிய அரசுப் பேரவையாக விருந்தபோது திருமதி பண்டாரநாயக்கா மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு அது தோற்கடிக்கப்பட்டது.

''இவ்வாறு சிறிமாபண்டாரநாயக்காவின் குடியுரிமையைப் பறிப்பதை ஒரு ஜனநாயகரீதியான நடவடிக்கையென்று நான் கருதவில்லை. உலகநாடுகளுக்குச் சென்று தார்மீகம் பற்றிப் போதிக்கும் பிரதமமந்திரி முதலில் அதுபற்றி இந்தநாட்டில் போதிக்க வேண்டும்.

''திருமதி பண்டாரநாயக்கா தவறு இழைத்திருந்தால் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவை கடந்த பொதுத்தேர்தலில் மக்கள் நிராகரித்தது போல் அவரையும் அத்தனகலத்தொகுதி மக்கள் நிராகரித்திருப்பார்கள்'' என்று கூறினர். (ம-செ)

### றேட்டரிக் கழகம்

# செட்டிகுளம் அகதிகளுக்கு ரூபா 10, 000 உதவி

## விதைநெல் வாங்க வழங்குகிறது

(யாழ்ப்பாணம்)
செட்டிகுளத்தில் குடியேறியுள்ள அகதிகள் குடும்பங்களுக்கு விதைநெல் வாங்க 10,000 ரூபா கொடுப்பதற்கு யாழ்ப்பாணம் றேட்டரி கழகம் முன்வந்துள்ளது.

கடந்த இனக்கலவரத்தின் போது செட்டிகுளத்திலுள்ள வீரமாணிக்கன் குளத்தில், இந்த அகதிகள் குடும்பங்கள் குடியேறி விவசாயத்தில் ஈடுபட்டுவந்தன.

இவர்களுக்கு விதைநெல் வாங்க அகதிகள் நிதியிலிருந்து பணம் ஒதுக்குவதென நேற்றுக்கூடிய யாழ். றேட்டரிக் கழகம் தீர்மானித்துள்ளது.

இங்குள்ள 100 அகதிகள் குடும்பங்களுக்கு பண உதவி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். றேட்டரிக் கழகச் செயலாளர் டாக்டர் எஸ். எஸ். சேனுதிராசா தெரிவித்தார்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 100 ரூபா விதைநெல் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க)

# ரூபா1 லட்சம் பெறுமதியான வைத்திய நூல்கள்

## அமெரிக்க றேட்டரிகழகம் வழங்கியது

(யாழ்ப்பாணம்)
சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வைத்திய சஞ்சிகைகளை அமெரிக்க றேட்டரிக் கழகம் யாழ். றேட்டரிக் கழகத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளதாக, யாழ். றேட்டரி கழகச் செயலாளர் டாக்டர் எஸ். எஸ். சேனுதிராசா தெரிவித்தார்.

சுமார் 2000 வைத்திய நூல்களும், சஞ்சிகைகளும் கிடைத்திருப்பதாகவும் இவை தற்பொழுது பகுதி பகுதியாக பிரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையிலுள்ள வைத்திய நூல் நிலையத்திற்கு இந்நூல்கள் வழங்கப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசினர் வைத்தியசாலை, வைத்திய நூல்நிலைய நூலகரிடம் இந்நூல்களை விரைவில் யாழ். றேட்டரிக் கழகம் கையளிக்கும். (க)

(கொழும்பு)
சிறிமா, பீலிக்ஸ் குடியுரிமை ரத்து பிரேரணை விவாதஆரம்பத்தில் விவாதத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள நேரம் போதாதென்று எதிர்க்கட்சித்தலைவர் திரு.அ.அமிர்தலிங்கமும் சுதந்திரக்கட்சித் தலைவர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவும் ஆட்சேபம் தெரிவித்தபோது, பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா பின் வருமாறு கூறினர்.

''சிறிலங்கா சுதந்திரக்கட்சி தான் அப்படியானதொரு நிலையை ஏற்படுத்தியுள்ளது. பாராளுமன்றம் தகர்த்தெறியப்படுவதற்கு முன்னர் ஓப் பிரேரணையை நிறைவேற்றவே இந்த நடவடிக்கை'' என்ருர் பிரதமர். (ம-இ)

## குடியுரிமை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
துக்கு அரசு நிதி வழங்கும். வீடு வீடாகச் சென்று தேர்தல் பிரச்சாரம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

ஜனதிபதித் தேர்தல் விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்தின் படி ஜனதிபதி பதவி இடையில் காலியானல், புதிய ஜனதிபதிபாராளுமன்றத்திலிருந்து தெரிவு செய்யப்படுவார். பதவிக்காலம் முடியும் வரை அவரே ஜனதிபதியாக இருப்பார்.

குடியுரிமை இழந்த ஒருவர்: இன்னுமொரு கட்சிக்காகவோ அல்லது மற்றுமொரு நபருக்காகவோ பிரச்சாரம் செய்ய முடியாது.

பாராளுமன்றம் மீண்டும் இம் மாதம் 27-ல் கூடும்.

## பரந்தன் கொலை.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
சம்பவத்தின்போது பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கியும், வெற்றுத் தோட்டா ஒன்றும் பொலிஸாரினல் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இது சம்பந்தமாக ஏற்கனவே சந்தேகத்தின்மீது கிருஷ்ணராசா கைது செய்யப்பட்டுள்ளார்.

# இன்று பண்டிதமணியின் நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)
இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை எழுதிய ''பாரத நவமணிகள்'' வெளியீட்டுவிழா கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய அருணசலம் அரங்கில் இன்று காலை நடைபெறும்.

தென்மராட்சி செந்தமிழர் மன்றத் தலைவர் ஆசிரியமணி சி. த. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பருத்தித்துறை நீதிபதி திரு. கே. எஸ். மகேசன் நூலை வெளியிட்டுவைப்பார்.

கலாநிதி அ. வி. மயில்வாகனம், வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சச்சிதானந்தம், தென்மராட்சி தமிழர் ஆசிரிய சங்கத் தலைவர் திரு. த. காசிநாதன் ஆகியோர் சிறப்புரை வழங்குவார்கள். இசைப்புலவர் சி. செல்லத்துரை வரவேற்புப்பா பாடுவார். இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஆசியுரை வழங்குவார். இசைநிகழ்ச்சியும் நடைபெறும்.

தென்மராட்சி செந்தமிழர் மன்றச் செயலாளர் பண்டிதர் பொ. கந்தையினர் விழாவிற்கான ஏற்பாடுகளை செய்துள்ளார்.

## வகுப்புக்கள்

அகில இலங்கை இளங்கலைஞர் மன்ற மியூசிக் அக்கடமியின் சங்கீத, நடன, வயலின், வீணை, மிருதங்க வகுப்புக்கள் விஜயதசமியன்று 19-10-80 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகும். புதிய மாணவ மாணவியர் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 7117

## மரண அறிவித்தல்

### குழந்தைவேலு முத்துசாமி

ஆனைப்பந்தி றைவர் முத்தப்பா ஆகிய குழந்தைவேலு முத்துசாமி காலமாகி விட்டார். இவர் இலைப் பாறிய ஏயார் சிலோன் எம் எஸ். மணியம் மற்றும் கிருஸ்ணசாமி இருவரினதும் தந்தையாவார். அன்னரது ஈமைக்கிரியைகள் இன்று 18 - 10 - 80 சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும். 7127

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் அக். 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registred as a News Paper at General Post Office Sri Lanka under No. QB 8948/78 The Eelanaadu P.B. No. 49 Tegrame Eelanaadu, Phone 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org